


04. 05. 2026

தலைப்புச் செய்திகள்

- தமிழக சட்டப்பேரவை தேர்தலில் த.வெ.க தனிப்பெரும் கட்சியாக உருவெடுத்துள்ளது.
  - திமுக பின்தங்கியுள்ள நிலையில், அஇஅதிமுக இரண்டாவது இடத்தில் உள்ளது.
- த.வெ.க தலைவர் திரு.விஜய் பெரம்பூர், திருச்சி கிழக்கு தொகுதிகளில் தொடர்ந்து முன்னிலையில் உள்ளார்.
- திமுக தலைவர் திரு.மு.க.ஸ்டாலின் கொளத்தூர் தொகுதியில் 8 ஆயிரம் வாக்குகள் வித்தியாசத்தில் பின்தங்கியுள்ளார்.
- அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு.எடப்பாடி கே.பழனிச்சாமி எடப்பாடி தொகுதியில் 46 ஆயிரம் வாக்குகள் வித்தியாசத்தில் முன்னிலையில் உள்ளார்.
- புதுச்சேரி யூனியன் பிரதேசத்தில் I.N.R .காங்கிரஸ் மீண்டும் ஆட்சி அமைக்க உள்ளது.
- கேரளாவில் காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய ஜனநாயக முன்னனி வெற்றிபெற்று ஆட்சி அமைக்கும் நிலையில் உள்ளது.

- அஸ்ஸாமில் ஆட்சியை தக்கவைத்துக்கொண்ட பிஜேபி, மேற்குவங்கத்தில் ஆட்சியை கைப்பற்றுகிறது.

இனி விரிவான செய்திகள்

**************

வாக்கு எண்ணிக்கை – மொத்த நிலவரம்

தமிழக சட்டப்பேரவை தேர்தலில் தமிழக வெற்றிக்கழகம் தனிப்பெரும் கட்சியாக உருவெடுத்துள்ளது.

ஆளும் திமுக பின்னடைவை சந்தித்துள்ளது.

அஇஅதிமுக 57 இடங்களில் முன்னிலையில் உள்ளது.

நடந்துமுடிந்த தமிழக தேர்தலில் எந்த ஒரு கட்சிக்கும் அறுதிபெரும்பான்மை கிடைக்காத நிலை ஏற்பட்டுள்ளது.

வாக்கு எண்ணிக்கை தொடர்ந்து நடைபெறும் நிலையில் த.வெ.க 110 இடங்களில் முன்னிலை பெற்றுள்ள நிலையில் அக்கட்சி தலைவர் விஜய் பெரம்பூர் மற்றும் திருச்சி கிழக்கு தொகுதிகளில் தொடர்ந்து முன்னிலை வகித்து வருகிறார்.

திமுக தலைவர் திரு.மு.க.ஸ்டாலின் கொளத்தூர் தொகுதியில் பின்தங்கியுள்ளார்.

10ஆவது சுற்றின் இறுதியில் த.வெ.க வேட்பாளர் வி.எஸ்.பாபு-வை விட 7 ஆயிரத்து 975 வாக்குகள் வித்தியாசத்தில் பின்தங்கியுள்ளார்.

பெரும்பாலான இடங்களில் த.வெ.க வேட்பாளர்கள் முன்னிலையில் உள்ள நிலையில் அஇஅதிமுக, திமுக, கட்சிகள் 2ஆவது 3ஆவது இடங்களில் உள்ளன.

**************

எடப்பாடி

அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு.எடப்பாடி கே.பழனிச்சாமி எடப்பாடி தொகுதியில் 73 ஆயிரம் வாக்குகள் பெற்று முன்னிலையில் உள்ளார்.

சுயேட்சை வேட்பாளர் பிரேம்குமாரை விட 46 ஆயிரம் வாக்குகள் வித்தியாசத்தில் முன்னிலை வகிக்கிறார்.

திமுகவின் காசி 19 ஆயிரம் வாக்குகள் பெற்றுள்ளார்.

**************

முன்னணி நிலவரம்

மொத்தமுள்ள 234 சட்டப்பேரவை தொகுதிகளில் இதுவரை கிடைத்த முன்னணி நிலவரங்களின் படி

த.வெ.க. 110 இடங்களிலும்

அ.இ.அ.தி.மு.க 56 இடங்களிலும்

தி.மு.க. 49 இடங்களிலும்

பா.ம.க. 5 இடங்களிலும்

காங்கிரஸ் 4 இடங்களிலும்

இந்திய கம்யூனிஸ்ட் 2 இடங்களிலும்,

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் 2

விடுதலை சிறுத்தைகள் 2 இடங்களிலும்

பிஜேபி ஒரு இடத்திலும்

தே மு தி க ஒரு இடத்திலும்

அம்மா மக்கள் முன்னேற்ற கழகம் ஒரு இடத்திலும்

இந்திய யூனியன் முஸ்லீம் லீக் ஒரு இடத்திலும் முன்னிலையில் உள்ளன.

**************

த.வெ.க முன்னிலையில் உள்ள தொகுதிகளின் விவரங்கள்

கும்மிடிபூண்டி,

பொன்னேரி,

திருவள்ளூர்,

ஆவடி,

மதுரவாயல்,

திருவொற்றியூர்,

அரக்கோணம்,

ஏற்காடு,

கிணத்துக்கடவு,

முசிறி

சிவகங்கை

உசிலம்பட்டி,

கிளியூர் உள்ளிட்ட 110 தொகுதிகளில் த.வெ.க முன்னிலையில் உள்ளது.

**************

அஇஅதிமுக

திருத்தணி, மதுராந்தகம், காட்பாடி அணைக்கட்டு, ஜோலார்பேட்டை. கீழ்பெண்ணாத்தூர், ஆரணி, ஆத்தூர்,

எடப்பாடி, நாமக்கல், பவானி, அரியலூர், லால்குடி உள்ளிட்ட 56 தொகுதிகளில் முன்னிலையில் உள்ளன.

**************

அமைச்சர்கள் முன்னிலை

திமுக-வின் பல அமைச்சர்கள் பின்தங்கியுள்ள நிலையில் பல்வேறு தொகுதியில் சில அமைச்சர்கள் முன்னிலையில் உள்ளனர்.

சேப்பாக்கத்தில் திமுகவின் உதய நிதி ஸ்டாலின்

ராணிப்பேட்டையில் ஆர்.காந்தி

கோவை தெற்கில் முன்னாள் அமைச்சர் செந்தில் பாலாஜி

ஆத்தூரில் ஐ.பெரியசாமி

வேடன்சந்தூரில் திரு.சாமிநாதன்

குன்னத்தில் எஸ்.எஸ்.சிவசங்கர்

திருவிடைமருதூரில் கோவி செழியன்

திருமயத்தில் ரகுபதி

போடி நாயக்கனூரில் திரு.ஓ.பன்னீர்செல்வம்

திருசெந்தூரில் அனிதா ராதாகிருஷ்ணன் ஆகியோர் முன்னிலை வகித்து வருகின்றனர்.

**************

அமைச்சர்கள் பின்னடைவு

அருப்புகோட்டையில் அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர் ராமசந்திரன்

ஆவடியில் நாசர்

ஈரோடு மேற்கில் முத்துசாமி

காட்பாடியில் துரைமுருகன்

குறிஞ்சிபாடியில் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், ஆகியோர் பின்தங்கியுள்ளனர்.

**************

காங்கிரஸ் முன்னிலை

திமுக கூட்டணியில் அங்கம் வகித்துள்ள காங்கிரஸ், மயிலாடுதுறை, திருவாடானை, குளச்சல் விளவங்கோடு தொகுதிகளில் முன்னிலையில் உள்ளது.

**************

சென்னை

சென்னையில் மொத்தமுள்ள 16 தொகுதிகளில் 15 தொகுதிகளில் த.வெ.க முன்னிலையில் உள்ளது.

செங்கல்பட்டில் மொத்தமுள்ள 7 தொகுதிகளில் 2 தொகுதிகளில் அஇஅதிமுகவும்,

5 இல் த.வெ.கவும் முன்னிலையில் உள்ளன.

**************

திருச்சி

திருச்சியில் திமுக வசமிருந்த 9 சட்டமன்ற தொகுதிகளில் மணப்பாறை, முசிறி, ஸ்ரீரங்கம், திருவெறும்பூர் துறையூர் தனி, திருச்சி கிழக்கு தொகுதிகளில் த.வெ.க முன்னிலை வகித்து வருகிறது.

திருச்சி மேற்கு தொகுதியில் 18ஆவது சுற்றில் திமுக வேட்பாளர் திரு.கே.என்.நேரு 4 ஆயிரத்து 450 வாக்குகள் வித்தியாசத்தில் முன்னிலையில் உள்ளார்.

11 ஆவது சுற்று இறுதியில் மண்ணச்சநல்லூர் தொகுதியில் திமுக வேட்பாளர் கதிரவன் முன்னிலையில் உள்ளார்.

லால்குடியில் அஇஅதிமுக வேட்பாளர் லீமா ரோஸ் மார்ட்டின் முன்னிலையில் உள்ளார்.

திருவெறும்பூர் தொகுதியில் 7 ஆவது சுற்றில் த.வெ.க.வின் நவல்பட்டு விஜி 601 வாக்குகள் வித்தியாசத்தில் முன்னிலையில் உள்ளார்.

ஸ்ரீரங்கத்தில் 13 ஆவது சுற்றில் த.வெ.க.வின் ரமேஷ் 16 ஆயிரத்து 885 வாக்குகள் வித்தியாசத்தில் முன்னிலையில் உள்ளார்.

முசிறியில் 14ஆவது சுற்றில் தவெகவின் விக்னேஷ் 12 ஆயிரத்து 453 வாக்குகள் வித்தியாசத்தில் முன்னிலையில் உள்ளார்.

துறையூரில் தவெகவின் ரவிசங்கர் 2 ஆயிரத்து 196 வாக்குகளுடனும்,

மணப்பாறையில் 12வது சுற்றில், தவெகவின் கதிரவன் 8 ஆயிரத்து 46 வாக்குகள் முன்னிலையில் உள்ளார்.

**************

தர்மபுரி

தர்மபுரியில் மொத்தமுள்ள 5 தொகுதிகளிலும் அஇஅதிமுக கூட்டணி முன்னிலையில் உள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

வாய்ஸ்

**************

உதகை

நீலகிரி மாவட்டத்தில் சட்டப்பேரவை வாக்கு எண்ணிக்கை நிலவரம் குறித்து எமது செய்தியாளர்

வாய்ஸ்

**************

கோவை

அவிநாசி தனி சட்டமன்ற தொகுதியில் 10 ஆவது சுற்று இறுதியில் த.வெ.க ஆயிரத்து 792 வாக்குகள் வித்தியாசத்தில் முன்னிலையில் உள்ளது.

**************

தஞ்சை

தஞ்சை மாவட்டத்தின் பல்வேறு தொகுதிகளில் திமுக வேட்பாளர்கள் முன்னிலையில் உள்ளதாக எமது செய்தியாளர் கூறுகிறார்.

வாய்ஸ்

**************

தென்காசி

தென்காசி மாவட்டத்தில் மொத்தமுள்ள 5 தொகுதிகளில்

சங்கரன் கோவில், கடையநல்லூர், ஆலங்குளத்தில் அஇஅதிமுகவும்

வாசுதேவநல்லூர், தென்காசியில் திமுகவும், முன்னிலையில் உள்ளன.

**************

கன்னியாகுமரி

கன்னியாகுமரியில் மொத்தமுள்ள 6 தொகுதிகளில் குளச்சல், விளவங்கோடில் காங்கிரசும்,

நாகர்கோவில் மற்றும் கன்னியாகுமரியில் திமுகவும்

கிள்ளியூரில் த.வெ.கவும்,

பத்மநாபபுரத்தில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியும் முன்னிலையில் உள்ளன.

**************

கடலூர்

கடலூரில் காங்கிரஸ் வேட்பாளர் ஏ.எஸ்.சந்திரசேகர் 4ஆவது சுற்று இறுதியில் 14 ஆயிரத்து 427 வாக்குகளுடன் முன்னிலையில் உள்ளார்.

நெய்வேலியில் அஇஅதிமுக வேட்பாளர் சொரத்தூர் ராஜேந்திரன் 5 ஆயிரத்து 502 வாக்குகள் வித்தியாசத்தில் திமுக வேட்பாளரை விட முன்னிலையில் உள்ளார்.

பன்ருட்டியில் 6ஆவது சுற்று இறுதியில் அஇஅதிமுக வேட்பாளர் மோகன் முன்னிலையில் உள்ளார்.

**************

தேனி

போடி சட்டமன்ற தொகுதியில் 7 ஆவது சுற்று முடிவில் திமுகவின் திரு.ஓ. பன்னீர்செல்வம் ஆயிரத்து 927 வாக்குகள் வித்தியாசத்தில் முன்னிலையில் உள்ளார்.

கம்பம் தொகுதியில் த.வெ.க வேட்பாளர் ஜெகன்னாத் மிஸ்ரா 3 ஆயிரத்து 2 வாக்குகள் வித்தியாசத்தில் முன்னிலை வகித்து வருகிறார்.

**************

பெரம்பலூர்

பெரம்பலூரில் 8ஆவது சுற்று இறுதியில் த.வெ.க வேட்பாளர் சிவகுமார் தொடர்ந்து முன்னிலை வகித்து வருகிறார்.

குன்னம் தொகுதியில் திமுக வேட்பாளர் திரு.எஸ்.எஸ்.சிவசங்கர் 9 ஆயிரத்து 800 வாக்குகள் வித்தியாசத்தில் முன்னிலையில் உள்ளார்.

**************

கள்ளக்குறிச்சி

கள்ளக்குறிச்சி தனி சட்டமன்ற தொகுதியில் த.வெ.க ஆயிரத்து 659 வாக்குகள் வித்தியாசத்தில் முன்னிலையில் உள்ளது.

**************

ஈரோடு

ஈரோடு மாவட்டம் மொடக்குறிச்சியில் 9ஆவது சுற்று இறுதியில் த.வெ.க மூவாயிரத்து 371 வாக்குகள் முன்னிலையில் உள்ளது.

கோபிசெட்டி பாளையத்தில் 11 ஆவது சுற்று இறுதியில் த.வெ.க.வின் திரு.செங்கோட்டையன் 9 ஆயிரத்து 275 வாக்குகளுடன் முன்னிலையில் உள்ளார்.

பெருந்துறையில் 13 ஆவது சுற்றில் அஇஅதிமுக 5 ஆயிரத்து 280 வாக்குகள் முன்னிலையில் உள்ளது.

**************

திண்டுக்கல்

திண்டுக்கல் சட்டப்பேரவை வாக்கு எண்ணும் நிலவரம் குறித்து எமது செய்தியாளர்

வாய்ஸ்

**************

நாமக்கல்

நாமக்கல் சட்டப்பேரவை வாக்கு எண்ணும் நிலவரம் குறித்து எமது செய்தியாளர்

வாய்ஸ்

**************

வேலூர்

காட்பாடி தொகுதியில் 5ஆவது சுற்று இறுதியில் அஇஅதிமுக வேட்பாளர் ராமு 5 ஆயிரத்து 820 வாக்குகள் வித்தியாசத்தில் திமுக வேட்பாளர் துரைமுருகனை விட முன்னிலையில் உள்ளார்.

**************

நெல்லை

நாங்குநேரியில் த.வெ.க 2 ஆயிரத்து 5 வாக்குகள் வித்தியாசத்தில் முன்னிலையில் உள்ளது.

ராதாபுரத்தில் 2 ஆயிரத்து 16 வாக்குகள் வித்தியாசத்தில் த.வெ.க முன்னிலையில் உள்ளது.

திமுகவின் அப்பாவு இத்தொகுதியில் பின்தங்கியுள்ளார்.

**************

நாகை

நாகை தொகுதியில் 7ஆவது சுற்று இறுதியில் திமுக கூட்டணியில் உள்ள மனித நேய மக்கள் கட்சி தலைவர் H.M ஜவாஹீருல்லா தொடர்ந்து முன்னிலையில் உள்ளார்.

கீழ்வேலூரில் த.வெ.க வேட்பாளர் செந்தில் பாண்டியன் முன்னிலையில் உள்ளார்.

**************

மன்னார்குடி

மன்னார்குடியில் 12 ஆவது சுற்று இறுதியில் திமுகவின் டி.ஆர்.பி.ராஜா பின்தங்கியுள்ளார்.

அமமுக வேட்பாளர் எஸ்.காமராஜ் மூன்றாயிரம் வாக்குகள் முன்னிலையில் உள்ளார்.

**************

பிற மாநில தேர்தல்கள்

புதுச்சேரி

புதுச்சேரி யூனியன் பிரதேசத்தில் மொத்தமுள்ள 30 சட்டப் பேரவை தொகுதிகளின் 17 தொகுதிகளின் நிலவரம் வெளிவந்துள்ள நிலையில்,

ஆளும் என். ஆர். காங்கிரஸ் கூட்டணி 5 இடங்களில் வெற்றி பெற்று 4 இடங்களில் முன்னிலை பெற்றுள்ளது.

பி.ஜே.பி. ஒரு இடத்தில் வெற்றி பெற்று ஒரு தொகுதியில் முன்னிலை வகிக்கிறது.

அ.இ.அ.தி.மு.க., தி.மு.க. காங்கிரஸ் கட்சிகள் தலா ஒரு தொகுதியில் வெற்றி பெற்றுள்ளன.

கேரளம் மாநிலத்தில் மொத்தமுள்ள 140 சட்டப்பேரவை தொகுதிகளில் காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய ஜனநாயக முன்னணி நூற்றுக்கும் மேற்பட்ட இடங்களில் முன்னிலை பெற்று ஆட்சியமைக்கும் நிலையில் உள்ளது.

ஆளும் இடதுசாரி ஜனநாயக முன்னணி 39 இடங்களில் முன்னிலை பெற்றுள்ளது.

பி.ஜே.பி. 2 தொகுதிகளில் முன்னிலையில் உள்ளது.

இம்மாநிலத்தில் காங்கிரஸ் 3 இடங்களில் வெற்றி பெற்று 59 இடங்களில் முன்னிலையில் உள்ளது.

இக்கூட்டணியில் இந்திய யூனியன் முஸ்லீம் லீக் 23 இடங்களிலும்,

கேரள காங்கிரஸ் 7 இடங்களிலும் முன்னிலை பெற்றுள்ளன.

ஆளும் மார்க்சிஸ்ட் கம்யுனிஸ்ட் ஒரு இடத்தில் வெற்றி பெற்று முன்னிலை வகிக்கிறது.

அம்மாநில முதலமைச்சர் திரு. பிணராயி விஜயன் தர்மடம் தொகுதியில் 2 ஆயிரத்து 792 வாக்குகள் வித்தியாசத்தில் முன்னிலையில் உள்ளார்.

**************

மேற்கு வங்கம்

மேற்கு வங்க மாநிலத்தில் 293 சட்டப் பேரவைகளுக்கான வாக்கு எண்ணிக்கையில் பி.ஜே.பி. 189 தொகுதிகளில் முன்னிலை பெற்று அம்மாநிலத்தில் ஆட்சியமைக்கும் நிலையில் உள்ளது.

ஆளும் திரிணாமுல் காங்கிரஸ் 92 தொகுதிகளில் முன்னிலை வகிக்கிறது.

திரிணாமுல் காங்கிரஸ் தலைவர் செல்வி மம்தா பானர்ஜி 15 ஆயிரத்து 494 வாக்குகள் வித்தியாசத்தில் முன்னிலையில் உள்ளார்.

**************

அசாம்

அசாம் மாநிலத்தில் மொத்தமுள்ள 126 சட்டப்பேரவை தொகுதிகளில் 79 தொகுதிகளில் முன்னிலை பெற்றுள்ள பி.ஜே.பி. ஆட்சியை தக்கவைத்துக் கொண்டுள்ளது.

இம்மாநிலத்தில் காங்கிரஸ் 24 தொகுதிகளிலும்,

மக்கள் முன்னணி கட்சி 10 தொகுதிகளிலும் முன்னிலை வகிக்கின்றது.

அசாம் மாநில காங்கிரஸ் தலைவர்

திரு. கௌரவ் கோகோய், லோர்ஹர்ட் தொகுதியில் பின்னடைவை சந்தித்துள்ளார்.

**************

இடைத்தேர்தல்

5 மாநிலங்களில் இடைத்தேர்தல் நடைபெற்ற 7 சட்டப் பேரவை தொகுதிகளில் பி.ஜே.பி. நான்கு இடங்களிலும்,

காங்கிரஸ் 2 இடங்களிலும்,

தேசியவாத காங்கிரஸ் ஒரு இடத்திலும் முன்னிலையில் உள்ளன.

இதன்படி குஜராத், மஹாராஷ்டிரா, நாகலாந்து, திரிபுராவில் தலா ஒரு சட்டப்பேரவை தொகுதியில் பி.ஜே.பி. முன்னிலை பெற்றுள்ளது.

கர்நாடகாவில் இடைத்தேர்தல் நடைபெற்ற 2 தொகுதிகளிலும் காங்கிரஸ் முன்னிலை வகிக்கிறது.

மஹாராஷ்டிராவில் தேசிய வாத காங்கிரஸ் சுனேத்ரா அஜித்பவார் முன்னிலை பெற்றுள்ளார்.

**************

இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது